பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்து ஆகும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், புதிய சட்டத்தின்படி அதிகாரம் இருக்கிறது என்று வாதம் சொல்லியிருக்கிறோம். இந்திய தலைமை நீதிமன்றமும் இந்தச் சட்டம் செல்லும் என்று அறிவித்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த பஸ் ரூட்டுகளை 75 மைலுக்குள் உள்ளவைகளைத் தவிர மற்றவைகளை முதலிலே எடுப்பது என்றும், பிறகு 50 மைலுக்கு மேல் உள்ளவற்றை எடுப்பது என்றும் சொன்னார்களே. எப்பொழுது அது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விகளும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. அ். லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அரசுத்துறை வழித் தடங்களைத் தவிர, கூட்டுறவுத் துறையில் எக்ஸ்-சாவிஸ்மென் பஸ் சொசைடி, அரிசன் பஸ் சொசைடி என்று ஆரம்பித்தால் அவற்றை ஊக்குவிக்க எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுத் துறையில் நடத்தும் பஸ்களுக்கு விதிவிலக்கு வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து, இப்பொழுது அது தேவையில்லை, தேசியமாக்குவது தான் சரி என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், உடனடியாக எல்லா பஸ்களையும் சர்க்காரே எடுக்கக்கூடிய அளவில் இல்லை என்றாலும், எப்படி நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டியிருக்கிறதோ, அதே போல், ஒரு சர்விசுக்கு 5, 10 பஸ் என்கிற அடிப்படையில் அதற்கு உச்சவரம்பு கட்ட சட்டம் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது கொள்கைபற்றிய கேள்வி.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், 15 வழித்தடங்களை அரசு ஏற்று நடத்துகிறது என்று கூறினார்கள். மாநிலத்தில் 75 மைலுக்கு மேல் இருக்கும் வழித்தடங்கள் 15 தானா? அதிகம் என்றால், அவற்றை தேசியமாக்க முன்வராததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, 17----6----1969-க்குப் பிறகு 75 மைல்களுக்கு மேற்பட்ட 15 பேருந்து வழித் தடங்கள், அந்த ரூட் பர்மிட் முடிவடையும் காலத்தில் என்கிற அடிப்படையில் 15 தடங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அரசுப் பேருந்துகளில் திருக்குறள்.

* 445 வினா.—**திரு. கே. போஜன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நம் மாநில போக்குவரத்துப் பேருந்துகளில் பொறித்து வைத்திருக்கும் குறளடிகளுக்குக் கீழே அதன் பொருளையும் சுருக்கமாக எழுதி வைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

ஹாஜி ம. மு. பீர் முகம்மது : பேரவைத்தலைவர் அவர்களே, நமது அரசு உடைமையான பேருந்துகளில் திருக்குறள் எழுதப்பட்டு, மக்கள் உணர்வைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் எல்லோரும் புலமை பெற்றவர்களாக இல்லை. ஆகவே, புலமையில்லாத பாமர மக்களும் குறள்களைப் புரிந்து கொள்ளும் வகையில், அதன் கருத்துரையையும் கீழே எழுதும் முயற்சி பயனுடைய ஒன்றாக இருக்கும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய விவரக் குறிப்பு இப்பொழுது இல்லை. எல்லோருமே மாண்புமிகு உறுப்பினரைப் போல் புலமை பெற்றவர்களாக இல்லை என்றாலும், குறள்களைப் படிப்பதால் பொருளைப் புரிந்து கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

Madurai Sourashtra Co-operative Bank

* 446 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Secretary of the Madurai Sourashtra Co-operative Bank was advanced loans in 1965 concurrently;

(b) if so, whether any action was taken against him;

(c) whether a number of appointments have been made violating the by-law regarding educational qualifications, etc., and

(d) if so, the action taken to regularise future appointments ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) ஆம்.

(எ) தகுதி பெறாதவர்களின் நியமனங்களை முறைப் படுத்த, அவர்களை கூட்டுறவு பயிற்சிப் பள்ளிக்கு அனுப்ப இந்த வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

DR. H. V. HANDE : Arising out of the answer given by the Minister, it looks as though some appointments against the rules have been made and afterwards, to regularise the irregular appointments, the persons have been sent for Co-operative training. What action have the Government taken on those persons who made the appointments against the rules and then sent the unqualified persons for training, and is it a fact that a defaulter contested the election for Directors held on 16th June 1968 by the Madurai Sourashtra Co-operative Bank ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Appointments are made not in contravention of the rules, but in contravention of the by-laws. Actually twelve of the employees have since acquired the necessary qualifications. There are only four still remaining unqualified. No further action is contemplated.

DR. H. V. HANDE : Is the Hon. Minister aware of the fact that in the audit report for 1966 it had been stated that bogus vouchers had been prepared to cover the tiffin expenses for Board